# உதயன்

சுடர் : 37 கதிர் : 349 | வியாழக்கிழமை 10 நவம்பர் 2022 | ஐப்பசி 24 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 12 விலை : ரூ. 50


## இளவாலையில் வாள்வெட்டு; ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், நவ.10

இளவாலை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பண்டத்தரிப்புப் பகுதி யிலுள்ள வீடொன்றில் நேற்று புதன்கிழமை காலை நால்வர டங்கிய குழுவால் நடத்தப்பட்ட வாள்வெட்டுத் தாக்குதலில் நபரொருவர் 11

# கூட்டமைப்புக்குள் குத்துவெட்டில்லை!

## சத்தியம் செய்கிறார் சம்பந்தன்



கொழும்பு, நவம்பர் 10

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கிடையில் எந்த முரண்பாடும் பிளவும் இல்லை. அவர்கள் ஓரணியாகச்செயற்படுகின்றார்கள். அதேநேரம், எந்தத் தேர்தலையும் எதிர்கொள்ளத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராகவே உள்ளது. 11

## போதைப் பொருள்கள் கிளிநொச்சியில் மீட்பு

கிளிநொச்சி, நவ.10

கிளிநொச்சி, பாரதிபுரத்திலுள்ள வீடொன்றில் மறைத்து வைக்கப் பட்டிருந்த 21 கிராம் ஐஸ் போதைப் பொருளும், 5 கிராம் 11

## போதைக்கு அடிமையான 81 மாணவர்கள் புனர்வாழ்வில்!

கொழும்பு, நவ.10

கடந்த 9 மாதங்களில் போதைப் பொருள் பாவனைக்கு அடிமை யான 81 பாடசாலை மாணவர்கள் புனர்வாழ்வு முகாம்களில் 11

## குரங்கு அம்மைத் தொற்றுடன் இலங்கையில் 2 ஆவது நபர்

கொழும்பு, நவ.10

குரங்கு அம்மைத் தொற்றுக்குள் ளான இரண்டாவது நபர் இலங் கையில் அடையாளம் காணப்பட் டுள்ளார். 11

## வடக்கே வருகிறார் ரணில்!

யாழ்ப்பாணம், நவ.10

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க எதிர்வரும் 18ஆம் திகதி வடக்கு வரவுள்ளார் என்று அறியமுடிகின்றது. 11

## வயோதிபர்களின் வீடுகளில் கொள்ளையர்கள் கைவரிசை

யாழ்ப்பாணம், நவ.10

கோப்பாய், பலாணை கண் ணகி அம்மன் ஆலயத்துக்கு அருகிலுள்ள 12

## 3 குடும்பங்கள் மழையால் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ.10

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக 3 11

## அரசியல் தீர்வைக் காட்டி ஏமாற்ற முயல்கிறது அரசு

### அதற்கான இயலுமை அரசிடம் இல்லை எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 10

புதிய அரசமைப்பை நிறைவேற்று வோம், அரசியல் தீர்வைப் பெற் றுத் தருவோம் என்று பொய்யான வாக்குறுதிகளை வழங்கி தமிழ் மக்களையும் தமிழ்த் 11

## முல்லைத்தீவில் கனமழை: வெட்டிவிடப்பட்ட வட்டுவாகல்

முல்லைத்தீவு, நவ.10

முல்லைத்தீவு மாவட்டத்தில் கனமழை பெய்துவரும் நிலையில் வட்டுவாகல் கடல் நீரேரி கடலுக்குள் வெட்டி விடப்பட்டுள்ளது. வட்டுவாகல் மற்றும் சாலை கடல் நீரேரிகள் மழை வெள்ளத்தால் நிரம்பி யுள்ள நிலையில் பாலத் துக்கு மேலாக வெள்ளம் மேவிப் பாய்கின்றது. மக் கள் போக்குவரத்துச் செய் வதில் இடர்களை 11



## எல்லை தாண்டி மீன்பிடி: தமிழக மீனவர்கள் 7 பேர் நிபந்தனைகளுடன் விடுதலை

விரிவு - பக். 02

## 458 கிலோ கஞ்சா நெடுந்தீவில் மீட்பு!

விரிவு - பக். 03

## நினைவுகூர்வதற்கு 'கோல்பேஸில்' தடை

### பொலிஸாருடன் தள்ளுமுள்ளு

கொழும்பு, நவ.10

9 ஆம் திகதியை போராட்டத் தினமாக நினைவுகூர்வதற்கு நேற்றுப் பிற்பகல் காலி முகத்திடலுக்குச் சென்ற செயற்பாட்டாளர்கள் சில ருக்கு பொலிஸார் இடை யூறு விளைவித்தனர். அதனால் அங்கு பதற்ற மான நிலைமை ஏற்பட் டது. எனினும் பொலிஸா ரின் தடையையும் மீறி அவர்கள் தீபங்கள் ஏந்தி போராட்டத்தை நினைவு கூர்ந்தனர். காலிமுகத்திடல் மக்கள் போராட்டத்தின் வெற்றி யையும் அதற்காக தம்மை அர்ப் 12



## அகதிகள் படகில் பயணித்தோரில் 76 பேர் யாழ்ப்பாணத்தவர்கள்!

கொழும்பு, நவ.10

சர்வதேச கடற்பரப்பில் தத்தளித்த படகில் இருந்து மீட்கப்பட்ட 303 இலங்கையர்களில் 76 பேர் யாழ்ப் பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர் கள் எனத் தெரியவந்துள்ளது. இவர்கள் மலேசியாவுக்கு விமானம் மூலம் சென்று, படகு மூலம் வேறொரு நாட்டுக்கு 11

## உணவுக்கான நெருக்கடி இலங்கையில் மோசம்!

3.4 மில்லியன் பேருக்கு உதவி தேவை

ஐ.நா.சபை மீண்டும் அபாய எச்சரிக்கை

விரிவு - பக். 05

Digitized by Noolaham Foundation

# வழமைக்கு திரும்பியது கடவுச்சீட்டு வழங்கல்

கொழும்பு, நவ. 10

குடிவரவு மற்றும் குடியல்வுத் திணைக்களத்தின் சேவைகள் அனைத்தும் வழமைக்குத் திரும்பியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

கணினிக் கட்டமைப்பில் தொழில்நுட்பக்கோளாறு காரணமாக நாடளாவிய ரீதியில் உள்ள குடிவரவு மற்றும் குடியல்வுத் திணைக்களத்தின் அனைத்துப் பிராந்திய அலுவலகங்களிலும் நேற்றுமுன்தினம் சேவைகள் பாதிக்கப்பட்டன. இதனால் கடவுச்சீட்டுக்களை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது.

இந்த நிலையில் கணினி கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு சீர்செய்யப்பட்டமையை அடுத்து நேற்று அனைத்து சேவைகளும் வழமைக்குத் திரும்பியுள்ளன என திணைக்களப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ச-இ)

## கட்டுநாயக்கவில் செயலிழந்தது கணினிக் கட்டமைப்பு

கொழும்பு, நவ. 10

கட்டுநாயக்க விமான நிலையத்தில் பயணிகளுக்கான குடிவரவு மற்றும் குடியகல்வு நடவடிக்கைகள் தற்போது இயந்திரமல்லா மனிதவலு முறைமையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் பிரதான அலுவலகம் மற்றும் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பிராந்திய அலுவலகங்களிலும் கணினி அமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக கடந்த சில நாள்களாக சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனாலேயே விமான நிலையத்தில் இயந்திரமல்லா மனிதவலு முறைமையில் சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணினியின் கோளாறு சீர்செய்யப்படும் வரை இந்த முறைமை நடைமுறையில் இருக்கும் என்று குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ஒ- 14,இ)

# போதையைக் கட்டுப்படுத்த வீதிகளில் ஏன் இராணுவம்?

### பொலிஸாருக்கு என்ன வேலை என்று முன்னாள் எம்.பி. சரவணபவன் கேள்வி




**யாழ்ப்பாணம், நவ. 10**

**வடமாகாணத்தில் அதிகரித்துவரும் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தும் சோதனை நடவடிக்கைகளுக்கு எதற்காக இராணுவம் களமிறக்கப்படவேண்டும்? அவ்வாறு இராணுவத்தைக் களமிறக்கித்தான் போதைப்பொருள் பயன்பாட்டைக் கட்டுப்படுத்த முடியுமென்றால் பொலிஸாருக்கு என்ன வேலை? - இவ்வாறு கேள்வி எழுப்பினார் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன்.**


சங்கானை சிவப்பிரகாசா மகா வித்தியாலயத்தின் அரசறிவியல் மன்றத்தின் 'அதிகாரம் 1 ' நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களை உலகளாவிய ரீதியில் பயங்கரவாதிகளாக ஆக்கிவிட்டு தற்போது இந்த அரசாங்கம் தடுக்கவேண்டிய விடயங்களைத் தடுக்காதிருக்கின்றது. தமிழர் தாயகத்தில் இன்று எங்கு பார்த்தாலும் போதைப்பொருள்கள் நிறைந்துள்ளன. இவை எங்கிருந்து வருகின்றன. தமிழர்களுக்கு சர்வதேச தளத்தில் இருக்கும் நற்பெயரை மாற்றுவதற்காகவே இந்த நடவடிக்கை என்றும் கேட்க வேண்டியிருக்கின்றது.

எத்தனையோ தசாப்தங்களாக எமது முன்னோர்கள் கட்டிக்காத்த பண்பாடுகள், கலைகள், கலாசாரங்கள் மற்றும் சமூக விழுமியங்களை இந்த போதைப் பொருள் பாவனை உடைத்துக் கொண்டிருக்கின்றது. பண்பாடுகளையும் விழுமியங்களையும் தொலைக்கும் மக்கள் கூட்டமாக தமிழர்கள் இன்று மாறிக் கொண்டிருக்கின்றனர். ஆதலால், தமது பிள்ளைகளின் நடத்தைக்கோலங்கள் தொடர்பில் பெற்றோர் அதீத கவனத்துடன் இருக்கவேண்டியது தற்போது மிகக்கட்டாயம். பிள்ளைகள் தொடர்பான தேடலும் புரிதலும் பெற்றோருக்கு தற்காலத்தில் மிகமிக அவசியம்.

போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்காக இராணுவச் சோதனைச்சாவடிகளை அமைக்கப்போவதாகச் சொல்கின்றனர். இனி அனைத்து இடங்களிலும் இராணுவம் வாகனங்களை வழிமறித்து இந்தச் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இதனால், ஒருவிதமான பயந்த மனோநிலைக்குள் தமிழர்கள் தள்ளப்படுவார்கள். ஏனெனில் எமது கடந்தகால அனுபவங்கள் அத்தகையவை. இராணுவம் தான் சோதனைகளை மேற்கொள்ள வேண்டும். போதையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றால் எதற்காக வடக்கில் பொலிஸார்? பொலிஸாரால் தமது கடமைகளைச் செய்ய முடியவில்லையா? இலஞ்சம் பொலிஸாரின் நேர்த்தியான கடமைக்கு இடையூறாக இருக்கின்றதா? என்ற நியாயமான சந்தேகங்கள் எமக்கு எழுகின்றன. தமிழர்களாகிய நாம் ஓரணியில் நின்று இந்தப் போதைக்கலாசாரத்துக்கு முடிவுகட்ட வேண்டும்- என்றார். (ம-125)

# ஒரு லீற்றர் டீசலில் 12/= இழப்பாம்!



### நாடாளுமன்றில் அரசு ஒப்பாரி

கொழும்பு, நவ. 10

தற்போது நடைமுறையில் உள்ள எரிபொருள் விலைக்கு அமைவாக ஒரு லீற்றர் டீசலுக்காக அரசுக்கு 12 ரூபா இழப்பு ஏற்படுகின்றது என்று எரிசக்தி மற்றும் மின்சக்தி இராஜாங்க அமைச்சர் டீ.வீ.சானக்க தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலைச் சூத்திரம் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே முன்வைத்த கருத்துக்களுக்குப் பதிலளிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர, விலைச் சூத்திரத்துக்கு அமைய எரிபொருள் விலையை மாற்றுவதாக உறுதியளித்தார் எனவும். ஆனால் இம்முறை விலைச்சூத்திரத்தின்படி எவ்வித மாற்றமும் ஏற்படாது என அறிவித்ததன் மூலம் மக்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாகவும் ஹேஷா விதானகே சுட்டிக்காட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# உள்ளாட்சித் தேர்தலில் பெரமுன வெற்றிபெறும்!

### சாகர காரியவசம் நம்பிக்கை

கொழும்பு, நவ. 10

உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படும். அதற்கு எவ்வித தடையும் இல்லை. அந்தத் தேர்தலில் பொதுஜன பெரமுன இலகுவில் வெற்றிபெறும் என்று கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன கட்சியின் ஊடக சந்திப்பு அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது உள்ளாட்சிசபைத் தேர்தல் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"உள்ளாட்சிசபைத் தேர்தல் நடத்தப்படும். அதை நடத்துவதில் எவ்வித தடையும் இல்லை. எந்தநேரத்தில் தேர்தல் நடத்தப்பட்டாலும் அதனை எதிர்கொள்வதற்கு நாம் தயார்.

கட்சி என்ற வகையில் ஏனைய எல்லாக் கட்சிகளைவிடவும் நாம் முன்னிலையில் இருக்கின்றோம். கிராமமட்ட ஆதரவு உள்ளது.

எனவே, தேர்தலில் இலகுவில் வெற்றி பெறுவோம். பொதுஜன பெரமுனவின் தவிசாளர் ஜி.எல்.பீரிஸ் இல்லாததால் எமது கட்சி நடவடிக்கைக்கு எவ்வித பாதிப்பும் இல்லை. எமது கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ச எமக்குப் பலமாக உள்ளார்" - என்றார். (ம-44)

### எல்லை தாண்டி மீன்பிடி:

# தமிழக மீனவர்கள் 7 பேர் நிபந்தனைகளுடன் விடுதலை

யாழ்ப்பாணம், நவ. 10

எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைதான தமிழக மீனவர்கள் ஏழு பேரை நிபந்தனைகளுடன் விடுதலை செய்யுமாறு நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 27ஆம் திகதி எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் 7 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

குறித்த வழக்கு நேற்று இரண்டாவது முறையாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது வழக்கை விசாரித்த நீதிபதி ஜே.கஜநிதீபாலன் மீனவர்கள் 7 பேரையும் நிபந்தனைகளுடன் விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார்.

மேலும் மீனவர்கள் பயன்படுத்திய படகுக்கான விசாரணை எதிர்வரும் ஜனவரி மாதம் 27ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ச-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தில் பரவலாக மரநடுகையை மேற்கொள்க



## பிரதம செயலாளர் அறிவுறுத்து

**யாழ்ப்பாணம், நவ. 10**

**மரநடுகை மாதத்தை முன்னிட்டு வடமாகாண சபைக்குட்பட்ட அமைச்சுகள், திணைக்களங்களில் மரநடுகையை மேற்கொள்ளு மாறு வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன அறிவித்துள் ளார். இதற்கான சுற்றறிக்கை வடமாகாண சபைக்குட்பட்ட அரச நிறு வனங்களின் பிரதானிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.**

அமைச்சுக்கள், திணைக்களங் கள், பிரிவு அலுவலகங்களில் தலா 50 மரங்களை நடுமாறு அந்தச் சுற்றறிக்கையில் குறிப்பி டப்பட்டுள்ளது.

அத்துடன், இலுப்பை, மருதம், புங்கை, பலா போன்ற மரங்களுக்கு இந்த மரநடுகைத் திட்டத்தின்போது முன்னுரிமையளிக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடமாகாணசபையின் விவசாய அமைச்சராக பொ.ஐங்கரநேசன் பதவிவகித்த காலப்பகுதியில், கார்த்திகை மரநடுகை மாத தீர்மா னம் வடமாகாண சபையில் நிறை வேற்றப்பட்டிருந்தது.

இதற்கான முழுமையான முயற் சியை பொ.ஐங்கரநேசன் மேற் கொண்டிருந்தார். கார்த்திகை மாத மரநடுகைத் திட்டம் பெருமெடுப் பில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந் தது. வடமாகாணசபை ஆட்சிக் காலம் முடிந்ததும், அதிகாரிகள் அதைப்பற்றி அக்கறை காண்பிக்க வில்லை. எனினும், பொ.ஐங்கர நேசனின் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் கார்த்திகை மரநடுகை மாத திட்டத்தை சமூக மட்டத்தில் செயற்படுத்தி வந்தது.

இந்த நிலையில், தற்போதைய வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, வடமாகாண சபையின் தீர்மானமான மர நடுகைத் திட்டத்தை செயற்படுத்த பணிப்புரை விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# பால் கொடுக்கும் 'பார்லிமென்ட்'

கொழும்பு, நவ. 10

நாடாளுமன்றத்தைப் பார்வையிடுவதற்காகச் செல்லும் பாடசாலை மாணவர்களுக்கு ஒரு குவளை பால் வழங்குவதற்குத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு அதன் செயலாளர் நாயகம் தம்மிக தஸநாயக்க தலை மையில் நேற்றுமுன்தினம் கூடியது. இதன் போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் அடிப்படையில் ஆகக்கூடிய தாக சுமார் 500 மாணவர்களுக்கு தினமும் பால் வழங்கப்படவுள்ளது. அடுத்த வருடம்முதல் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# ஆளுநர்களை மாற்ற ஜனாதிபதி திட்டம்!

கொழும்பு, நவ. 10

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வால் நியமிக்கப்பட்ட 9 மாகாணங்களுக் குமான ஆளுநர்களை நீக்கிவிட்டுப் புதிய ஆளுநர்களை நியமிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பரிசீலித்து வருகின்றார் என்று அறியமுடிகின்றது.

அனைத்து மாகாணசபைகளுக்குமான ஆயுட்காலம் நிறைவடைந்த நிலையில் நாட் டில் விரைவில் தேர்தலொன்று இடம்பெறும் என்று கருதப்படும் பின்னணியிலேயே இந்த ஆளுநர் மாற்றம் தொடர்பில் ஜனாதிபதி ஆலோசித்து வருகின்றார்.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழு வொன்றே இது தொடர்பான முன்னெடுப்புக் களை மேற்கொண்டு வருகின்றது.

அதேநேரம், முன்னாள் அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு ஆளுநர் பதவி வழங்கப் படவுள்ளதாகவும் அறிய முடிகின்றது. (ம)



# ம.எண்ணெய், உரம் வழங்குமாறு கோரி விவசாயிகள் கவனவீர்ப்பு!

யாழ்ப்பாணம், நவ. 10

விவசாயத்துக்குத் தேவை யான மண்ணெண்ணெய், உரம் உள்ளிட்டவற்றை வழங் குமாறு கோரி புலோலி கம நலசேவை நிலைய முன்றி லிலிருந்து விவசாயிகள் கவனவீர்ப்புப் போராட்ட மொன்றை நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை முன்னெடுத்தனர்.

புலோலி கமநலசேவை நிலைய முன்றிலில் காலை 9 மணியளவில் ஆரம்பித்த போராட்டம் பருத்தித்துறை பிரதேச செயலகம்வரை சென்றது. அங்கு "மறுக் காதே மறுக்காதே மண் ணெண்ணெயை மறுக் காதே", "வழங்கு வழங்கு உரத்தை வழங்கு", "அடிக் காதே அடிக்காதே ஏழை விவசாயிகளின் வயிற்றில் அடிக்காதே", "ரணில் பொது ஜன பெரமுன அரசே உரம், கிருமி நாசினிகளை போதி யளவு கிடைக்க வழி செய்" உள்ளிட்ட பல வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதன்பின்னர் போராட்டத் தில் கலந்துகொண்ட பிரமு கர்கள், யாழ்.மாவட்டச்செய லருக்கு வழங்குமாறு மனு வொன்றை பருத்தித்துறை பிரதேச செயலரிடம் கைய ளித்தனர். அதனையடுத்து போராட்டம் நிறைவுக்கு வந் தது. (ஒ-14)

# போதைப்பொருள் கடத்தலில் மீனவர்கள் ஈடுபடக்கூடாது!!

## ஆரியகுளம் நாகவிகாரையின் விகாராதிபதி அறிவுரை

யாழ்ப்பாணம், நவ. 10

உயிர்கொல்லி போதைப்பொருள் கடத்தலில் வடக்கு மீனவர்கள் ஈடுபடக்கூடாது. அவ்வாறு ஈடு படுவோர் தொடர்பில் தகவல் கிடைத்தால் அதைத் தடுத்து நிறுத்த வேண்டும்- இவ்வாறு வடக்கு மீன வர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளார் ஆரிய குளம் நாகவிகாரையின் விகாராதிபதி.

கடலட்டை விவகாரம் தொடர்பில் ஆரியகுளம் நாகவிகாரை விகாராதிபதியை வடக்கு மீனவர்கள் நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினர். மீனவர்களுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங் களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது மேற்கண் டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருகின்றது. அந்த போதைப்பொருள் தமிழகத்திலிருந்து நாட்டுக்குக் கொண்டு வரப்படு வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில் கடற்றொழிலுக்குச் செல்லும் மீன வர்கள் தமது படகுகளில் ஏதாவது போதைப் பொருள் கடத்தப்படுவது தொடர்பில் தெரியவந்தால் அதைத் தடுத்து நிறுத்தவேண்டும். அத்துடன் வடக்கு மீனவர்கள் போதைப்பொருள் கடத்தலுக்கு துணைபோகக்கூடாது. மாறாக போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் மீனவர்கள் அதிக அக்கறை செலுத்த வேண்டும்- என்றார். (ஒ-14.20)

# லிட்ரோ, லாப்ஸ் சிலிண்டர்கள் தட்டுப்பாடின்றி வழங்கப்படும்


## இரு நிறுவனங்களின் அதிகாரிகள் அறிவிப்பு

கொழும்பு, நவ. 10

லிட்ரோ மற்றும் லாப்ஸ் எரிவாயு நிறுவ னங்கள் உள்நாட்டு எரிவாயு சிலிண்டர் களைத் தட்டுப்பாடின்றி வெளியிடும் என்று இரு நிறுவனங்களின் உயர் அதி காரிகள் அறிவித்துள்ளனர்.

அதன்படி, ஏதேனும் ஒரு பகுதியில் எரி வாயு தட்டுப்பாடு ஏற்பட்டால் நிறுவனத் துக்கு தெரிவிக்குமாறு லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் உயர் அதிகாரி தெரிவித் துள்ளார்.

கடந்த சில நாள்களாக லிட்ரோ மற்றும் லாப்ஸ் எரிவாயுக்களுக்கு கடும் தட்டுப் பாடு ஏற்பட்டுள்ளது என்று மக்கள் தெரி விக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-14.இ)



# 458 கிலோ கஞ்சா நெடுந்தீவில் மீட்பு!

யாழ்ப்பாணம், நவ. 10

நெடுந்தீவு கடற்பரப்பில் நேற்று 458 கிலோ கஞ்சா கடற்படையால் கைப்பற்றப்பட்டுள்ளது. இவை இந் தியாவில் இருந்து கடத்தப்பட்டவை [illegible] ளது. நெடுந்தீவு கடற்பரப்பில் சந் தேகத்துக்கு இடமான முறையில் பயணித்த படகை இடைமறித்துச் சோதனையிட்டபோதே கடற்படை யினரால் இந்தக் கஞ்சாப் பொதிகள் [illegible]பட்டன. அவற்றைக் கடத்தி [illegible]ர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதான இருவரில் ஒருவர் மண்டை தீவைச் சேர்ந்தவர் மற்றையவர் நாச்சிக்குடாவைச் சேர்ந்தவர்.

அவர்களிடம் மேலதிக விசாரணை கள் முன்னெடுக்கப்பட்டு வருகின் றன. (ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி கமலலோஜினி அவர்களின் தந்தையார்

**திரு.கந்தையா நாகராசா**

அவர்கள் கடந்த (06.11.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் வட்டம்
யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

## தகவல் தொழில்நுட்பப் பரீட்சை விண்ணப்பகாலம் நீடிப்பு

பொது தகவல் தொழில்நுட்பப் பரீட்சைக்கு பாடசாலை மற்றும் தனியார் பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்கும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது எனப் பரீட்சைத் திணைக்கள எம் அறிவித்துள்ளது. அதன்படி நவம்பர் 25 ஆம் திகதி வரை கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது. 2019, 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் தரம் 12 இல் கல்வி பயின்ற மாணவர்களே இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும். அனைத்து விண்ணப்பங்களும் கல்வி கற்ற பாடசாலையின் அதிபர்களே சமர்ப்பிக்க முடியும். விண்ணப்பதாரர்கள் தனிப்பட்ட விதத்தில் இந்தப் பரீட்சைக்குத் தோற்ற முடியாது 2022 (2023) உயர்தரப் பரீட்சை நடைபெறும் காலத்தில் இந்தப் பரீட்சை நடத்தப்படமாட்பாது. பரீட்சைக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனப் பரீட்சைத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் திரு.

**கணபதிப்பிள்ளை இராமலிங்கம்**

(வருமான வரி உத்தியோகத்தர் இறைவரி திணைக்களம்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19.08.1944 | 22.10.2021 |

திதி : புரட்டாதி துதியை

எம்மைப் பெற்று வளர்த்து பேணிப் பாதுகாத்து
அன்பும் அறிவும் ஊட்டி வளர்த்து
தரணியிலே வாழவைத்த - எங்கள்
அன்புத் தெய்வமே நீங்கள்
எம்மை விட்டுப் பிரிந்து
ஓராண்டு ஆன போதும்
எம் நெஞ்சத்தில் உங்கள் நினைவுகள்
என்றும் பசுமையாய் திகழ்கிறதே
உங்கள் கள்ளமில்லா சிரிப்பும்
நேசமும் மறைந்து போகுமா?

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

166, 1ஆம் குறுக்குதெரு.
யாழ்ப்பாணம்.

மனைவி, மகள்மார், மருமக்கள் பேரப்பிள்ளைகள்

(CS 21676) (3/6)



## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி ஆ.ரேணுகா அவர்களின் மாமனார்

**சின்னத்துரை அம்பலவாணர்**

(முன்னாள் மேலாளர், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்)
அவர்கள் கடந்த (02.11.2022) புதன்கிழமை காலமானார்.
அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் வட்டம்
யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி



## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் ஆசிரியர் திரு.கிருஸ்ணானந்தம் அவர்களின் அன்புத் தாயார்

**சச்சிதானந்தம் பரமேஸ்வரி**

அவர்கள் கடந்த (16.10.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்
அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் வட்டம்
யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

## மரண அறிவித்தல்

**மாணிக்கவாசகர் மகேசன்**



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22.04.1983 | 08.11.2022 |

புன்னாலைக்கட்டுவனை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கவாசகர் மகேசன் அவர்கள் கடந்த (08.11.2022) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கவாசகர் மற்றும் மனோரஞ்சிதமலர் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் இராசமணி தம்பதியரின் அன்பு மருமகனும், தயாநிதியின் பாசமிகு கணவரும், மதுஸ், திவான், சஜீன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மஞ்சுளாவின் அன்புச் சகோதரனும், றமணனின் அன்பு மைத்துனரும், றனுஸ், றனூஜா ஆகியோரின் மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2022) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப 1.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக புன்னாலைகட்டுவன் ஈவினை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


ஈவினை மத்தி,
புன்னாலைகட்டுவன்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 130 8822

(CS 21771) 1/6

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 12 . 01 . 1949 | 07 . 11 . 2022 |



**கந்தையா முருகையா**

**(நீர்வேலி அரசகேசரி விநாயகர் ஆலய நிர்வாகப் பொருளாளரும், இளைப்பாறிய நீர்வேலி கிராமிய வங்கி முகாமையாளரும், சரசாலை மத்தி வீரகீர்த்தி பிள்ளையார் கோயில் தலைவர்)**

நீர்வேலி வடக்கை பிறப்பிடமாகவும், சரசாலை மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட ச.கந்தையா முருகையா அவர்கள் (07.10.2022) திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா தண்டிகைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிவஞானம் அன்னம்மா தம்பதியரின் மருமகனும் இராசேஸ்வரியின் அன்புக் கணவரும் இராசையா, சந்திரராசா, தவபதி அம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அருணாசலம், மணிவாசகன், செந்தில்வாசன், யோகநாயகி, காலஞ்சென்ற அருளானந்தம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (10.11.2022) வியாழக்கிழமை சரசாலையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 3.00 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சரசாலை மத்தி,**
**சாவகச்சேரி.**

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 06 . 03 . 1932 | 09 . 11 . 2022 |



**கந்தையா கணபதிப்பிள்ளை**

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் வேலணை கிழக்கு 1ம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா கணபதிப்பிள்ளை நேற்று (09.11.2022) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-நாகமுத்து தம்பதியரின் மகனும் செல்லையா ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற திருமகளின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம், அருணாசலம் (அந்தோனி), பசுபதி, நாகேசு, வள்ளியம்மை மற்றும் பார்வதி (சுவிஸ்), சின்னத்தங்கம், நாகரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆருட்செல்வி (ஓய்வுநிலை சிரேஷ்ட தாதிய விடுதிச் சகோதரி, யாழ் .போதனா வைத்தியசாலை), சிவநாதன் (ஓய்வுநிலை தபால் திணைக்கள ஊழியர், வேலணை தபால் நிலையம்), பிரணவநாதன், அருள்வாணி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ஓய்வுநிலை உதவிக் கல்விப்பணிப்பாளர், க.கணபதி (தீவகக் கல்வி வலயம்), ரவீந்திரராணி, சிறிஸ்கந்தராசா ஆகியோரின் அன்பு மாமனாரும், Dr.தசாகன் (மாங்குளம் தள வைத்தியசாலை), தசானுசன் (மென்பொறியியலளார்), சிவடிலூஜினி (யாழ்.பல்கலைக்கழகம், இறுதியாண்டு மாணவி), பவஷாயினி (வேம்படி மகளிர் கல்லூரி, உயர்தர வகுப்பு மாணவி 2021) , சிறிசாயினி (மாணவி 2023 - யா/திருக்குடும்ப கன்னியர்மடப் பாடசாலை), சாயீஷன் (யாழ.மத்திய கல்லூரி) ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற நடராசா (விஞ்ஞானி), நாமகள், காலஞ்சென்றவர்களான கருணாகரன், முருகேசு (வைத்தியர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2022) வியாழக்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணை சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேலணை கிழக்கு,
வேலணை.

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## எகிப்தில் ஓர் அபாயக்குரல்!

காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச ஆய்வுகளை மேற்கொள்வதற்காகவும் தீர்மானங்கள் மற்றும் பொறிமுறைகளை உருவாக்குவதற்காகவும் உலகின் முதலாவது 'துறைசார் பல்கலைக் கழகத்தை' இலங்கையில் அமைக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. எகிப்தில் தற்போது நடைபெற்றுவரும் பருவநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச மாநாட்டில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே ரணிலால் இந்தப் பரிந்துரை – அழைப்பு முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

பருவநிலை மாற்றத்தால் குறிப்பாக பூமி வெப்பமாதலால் அதி ஆபத்தில் இருப்பவை தீவு நாடுகளே. இலங்கையும் ஒரு தீவுநாடு என்ற அடிப்படையில் ஜனாதிபதியின் இந்தப் பரிந்துரை சர்வதேச சமூகத்தால் அதிலும் குறிப்பாகத் தீவு நாடுகளால் மெச்சப்படுகின்றது – பாராட்டப்படுகின்றது. தீவு நாடுகளின் இருப்பை உறுதிசெய்வதற்கான கோரிக்கையை மன்றாட்டமாக முன்வைக்காமல், 'வளர்ச்சியடைந்த நாடுகளே கார்பனை அதிகம் கக்கிக் கொண்டிருக்கின்றன. இந்த நாடுகளால்தான் தீவு நாடுகள் ஆபத்தை எதிர்கொண்டுள்ளன. ஆதலால், கார்பனை வெளியேற்றும் வளர்ச்சியடைந்த நாடுகள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள தீவு நாடுகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும்' என்று நேர்பட விரல்நீட்டியிருக்கும் 'கெத்துக்காக' ரணிலை எத்தனை பாராட்டினாலும் அது தகும். அதேநேரம் ரணிலின் அரசியல் முதிர்ச்சி – சர்வதேசப் பிணைப்பு – அவருக்கு இருக்கக்கூடிய சர்வதேச அங்கீகாரம் போன்ற அம்சங்களையும் எகிப்து உரை கட்டியம் செய்கின்றது என்பதையும் இங்கே மாற்றுக் கருத்தின்றி ஏற்கத்தான் வேண்டும்.

ஆனால், ஒரு தீவு நாட்டின் ஜனாதிபதியாக – அழிவின் ஆபத்தம்சங்களை எதிர்கொண்டிருக்கும் தேசத்தின் பிரதிநிதியாக ரணிலின் கோரிக்கையை, தார்மீக கோபத்தை, ஒருவிதமான சலிப்பு மனநிலையை எவ்வளவுதூரம் சர்வதேசம் கண்டுகொள்ளப் போகின்றது என்ற கேள்வியும் இங்கே எழுவது தவிர்க்க முடியாததாகின்றது. ஏனெனில் அதிவேகத்தில் மாறிவரும் பருவநிலை மாற்றத்துக்கு எதிராக உலகத்தலைவர்கள் அபாயக்குரலெழுப்புவது இதுவொன்றும் முதல்முறையல்ல. கிளாஸ்கோவில் பருவநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச மாநாடு இடம்பெற்றபோது துவாலு நாட்டின் அமைச்சரொருவர் கடலுக்குள் இறங்கி நின்றபடி உரையாற்றினார். இதைவிட உரோமன் கத்தோலிக்கர்களின் தலைவரான பாப்பரசர் பிரான்ஸிஸ், பருவநிலை மாற்றத்துக்கு எதிராக, 'பூமியின் வெப்பநிலையைக் கட்டுப்படுத்த வல்லரசுகள் முன்வர வேண்டும்' என்றும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார். கிரைட்டா தன்பேர்க் என்ற சிறுமி 'பருவநிலை மாற்றத்துக்காக நடத்தாத போராட்டங்களே இல்லை' என்னும் அளவுக்கு இந்த விடயப்பரப்பில் அதி தீவிரமாக இயங்கி வருகின்றார். ஆனால், இவர்களின் கோரிக்கைகள் வலியுறுத்தல்கள் எதுவும் வல்லரசுகளின் காதுகளில் விழவில்லை – அவற்றின் இரும்பு இதயங்களை இளகச் செய்யவில்லை என்பதுதான் கசப்பான மெய்.

பூமி வெப்பமடைந்ததால் பருவநிலையில் முன்பின் முரணான மாறுபாடுகள் வலுவாக ஏற்பட்டிருக்கின்றன. இந்தப் பருவநிலைக் குழப்பத்தால் வலசைப்பறவைகள் தங்களின் எல்லையற்ற பறப்பு முயற்சிகளை மேற்கொள்ள முடியாமல் தவிப்பதாக கடந்தவாரம் மேற்கத்தேய ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. எவ்வளவு பாரதூரமான இயற்கை மீறல் இது. கார்பன் வெளியேற்றத்தாலும், பூமியை அதன் இயல்பு நிலையில் இருந்து கொஞ்சம்கொஞ்சமாக மாற்றுவிக்கும் சமூக விரோதச் செயற்பாடுகளாலும் மனிதகுலம் தன் இருப்பையே தொலைத்து வருகின்றது. எகிப்தில் எழுப்பப்பட்ட அபாயக் குரல்களுக்கு கார்பனை அளவுகடந்து வெளியேற்றும் வல்லரசுகள் செவிசாய்க்கும் என்ற நம்பிக்கை தீவு தேசங்களிடம் கொஞ்சமும் இல்லை. அந்தக் குணாம்சம் வல்லரசுகளிடம் இருந்திருந்தால் பூமியின் வெப்பநிலையை 2 செல்சியஸால் குறைப்பது என்று 130 உலகத்தலைவர்களுடன் பரிஸில் எட்டப்பட்ட சர்வதேச உடன்பாடு (?) நீர்த்துப்போகச் செய்யப்பட்டிருக்கின்றதே அது ஏன்?

## வடமாகாண மரநடுகை மாதம்

நவம்பர் 2022

"மரங்களை நேசிக்காத எவரும் இறைவனை நேசிப்பவர்கள் அல்லர்".

—மூப்பர் அம்பிலோகியோஸ் (கிரேக்க கிறிஸ்தவ மதகுரு)





# உணவுக்கான நெருக்கடி இலங்கையில் மோசம்!

## 3.4 மில்லியன் பேருக்கு உதவி தேவை
## ஐ.நா.சபை மீண்டும் அபாய எச்சரிக்கை

**கொழும்பு, நவ. 10**

**இலங்கையில் உணவு நெருக்கடி மீண்டும் மோசமாகி வருகின்றது. மனிதாபிமான உதவிகள் தேவைப்படுவோரின் எண்ணிக்கை 3.4 மில்லியனாக அதிகரித்துள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பில் ஐ.நா. சபை விடுத்துள்ள அறிக்கையில்,

இலங்கையில் உள்ள 22 மில்லியன் சனத்தொகையில் 1.7 மில்லியன் மக்களுக்கு உதவி தேவைப்படுவதாக கடந்த ஜூன் மாதம் ஐக்கிய நாடுகளின் நிறுவனங்கள் மதிப்பிட்டிருந்தன. இந்த நிலையில் தற்போது இந்த உதவி தேவைப்படுவோரின் எண்ணிக்கை 3.4 மில்லியனாக அதிகரித்துள்ளது. இலங்கையில், உணவு தேவைப்படுபவர்களுக்கு உணவளிக்க 79 மில்லியன் டொலர் திரட்டப்பட்டுள்ளது. எனினும் ஏழைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், கூடுதலாக 70 மில்லியன் டொலர் இலங்கையர்களுக்கு உணவளிக்கத் தேவைப்படுகின்றது. தொடர்ச்சியான இரண்டு பருவகாலங்களின் மோசமான அறுவடை, அந்நிய செலாவணி பற்றாக்குறை போன்ற காரணங்களால், இலங்கையில் உணவுப் பாதுகாப்பின்மை வியத்தகு அளவில் அதிகரித்துள்ளது. இலங்கையில் கடந்த ஆண்டு இந்தக் காலப்பகுதியில் 13.1 சதவீதமாக இருந்த வறுமை விகிதம் இந்த ஆண்டு 25.6 சதவீதமாக அதிகரித்துள்ளது - என்றுள்ளது. (ம)

# இரட்டைக்குடியுரிமைத் தடை நீக்கப்பட வாய்ப்பு உள்ளது

## பெரமுனவினர் இறுமாப்பு

கொழும்பு, நவ. 10

இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் அரசியலில் ஈடுபடுவதற்கான தடை நீக்கப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. அதற்கான சாத்தியம் இல்லாமல் இல்லை என்று பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

பெரமுனவின் ஊடக சந்திப்பு கொழும்பிலுள்ள அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலர் சாகர காரியவசம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக உரிய நேரத்தில் கோத்தாபய ராஜபக்ச இரட்டைக் குடியுரிமையைத் துறந்தார். இலங்கை பிரஜையாக தேர்தலில் போட்டியிட்டார். எனவே, தேவை ஏற்படின் உரிய நேரத்தில் பஸில் ராஜபக்சவும் தீர்மானம் எடுக்கலாம். துறப்பதா, இல்லையா என்பதை அவரே தீர்மானிக்கவேண்டும்.

பெரமுன என்பது பஸிலின் முழுப் பலத்தில் தங்கியிருக்கவில்லை. அவரும் எமக்கு மாபெரும் சக்தி. இரட்டைக் குடியுரிமை உடையவர்களுக்கு இந்த நாட்டில் அரசியல் உரிமையை இல்லாது செய்வதற்கு நான் தனிப்பட்ட ரீதியில் எதிர்ப்பு அது சரியான முடிவு அல்ல. தனிநபரை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைக்கு தற்போது விமர்சனங்கள் எழுந்துள்ளன. எனவே, எதிர்காலத்தில் மாற்றம் வரலாம். சட்டத்திருத்தம் கொண்டு வந்து தடையை நீக்குவதற்கான மாற்றமாகவும் அது இருக்கலாம் - என்றார். (ம-44)


நாளை

11.11.2022
வெள்ளிக்கிழமை
ஐப்பசி 25

சுபநேரம் : 06.06 - 07.36
ராகுகாலம்: 10.36 - 12.06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திரு. அந்தோனி எமிலியானுஸ்

யாழ். குருநகரைப் பிறப்பிடமாகவும் இல.131, மவுன்காமல் வீதியை வதிவிடமாகவும் கொண்ட கல்வித் திணைக்களத்தின் ஓய்வுபெற்ற (AO) நிர்வாக அதிகாரியான திரு. அந்தோனி எமிலியானுஸ் கடந்த (07.11.2022) திங்கட்கிழமை இறைவனடி எய்தி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனி மரியம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வின்சட் (ஐயாத்துரை) சிசிலியம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும்,எமிலியானுஸ் சவிரியம்மா (ரஞ்சிதம்) அவர்களின் அன்புக் கணவரும், சாந்தி, ஜோய் (பிரான்ஸ்), யூலி (பிரான்ஸ்), நிலா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற எடின் ஜெகஜோதி (ஆசிரியர்) மற்றும் ஜெனற் (பிரான்ஸ்), றெஜினா (பிரான்ஸ்) மௌறி (கனடா - பொறியியலாளர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் (12.11.2022) சனிக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அன்னை மடியில் 17.07.1940

ஆண்டவன் அடியில் 07.11.2022

131, மவுன்காமல் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

தொடர்பு: 077 593 7488, 021 222 4804

# மரண அறிவித்தல்



## நயினார் சிலுவைச்சிஅம்மா (சிலுவேஸ்திரி)

மல்வம் உடுவிலைப் பிறப்பிடமாகவும் அரசடி நல்லூரை வசிப்பிட மாகவும் கொண்ட நயினார் சிலுவைச்சிஅம்மா (சிலுவேஸ்திரி) நேற்று (09.11.2022) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா நயினாரின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா பார்வதிப் பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், ரணிஸ்குமார், டிலிஸ்குமார், அகிலா, அனுலா, அலஸ்ரெல்லா (லண்டன்), அனிலா (ஜேர்மன்), நிரேஸ்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், சசிகலா, சீதா, லேக்குமார் (சுதன்), விஜயகாந்தன், ஜெயசீலன் (லண்டன்), பிரியந்தன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ் சென்ற தேவராசா மற்றும் துரைராசா, செல்வராசா, யோராசா, இராஜேஸ்வரி, யோகேஸ்வரி, புவனேஸ்வரி (ராசாத்தி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான அரியகுட்டி, திருநாவுக்கரசு, ராசம்மா, சதாசிவம்,சாமியார், கண்மணிப்பிள்ளை, பிள்ளையம்மா, சண்முகராசா மற்றும் மங்கையர்க்கரசி, கமலா ஆகி யோரின் மைத்துனியும்,சங்கீத், லத்தீஸ், தீபிகா, கோபிகா, சங்கவி, சஜானாஷ், சைந்தவி, நிகிதா, கிருத்திகன், அன்சிகா (லண்டன்), பிறிஷா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2022) வியாழக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தோற்றம் 28.08.1951

மறைவு 09.11.2022

149/2 நான்காம் ஒழுங்கை,
அரசடி வீதி, நல்லூர்.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரைநகர் அபிவிருத்திச் சபையின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும்

தலைமை : திரு. இ. சிவசுப்பிரமணியம்
இடம் : சைவமகாசபை, மணற்காடு, காரைநகர்
காலம் : 20.11.2022 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 9.00 மணி

**குறிப்பு:-** 02.10.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்ற பொதுக்கூட்டம் வரை இணைந்து கொண்ட அனைத்து அங்கத்தவர்களையும் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**சுப்பிரமணியம் செந்தூரன்**
*செயலாளர்*
**காரைநகர் அபிவிருத்திச் சபை**
**மணற்காடு, காரைநகர்**

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
03.10.2010

மறைவு
06.11.2022

எமது பாடசாலை ஆசிரியர்
**திருமதி ஜெனற் றொசாணி யூட்தயாபதி**
அவர்களின் அன்பு மகள்
**செல்வி**
**யூ.ஹர்ஷனா**
அவர்கள் 06.11.2022 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.
மகளின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் மகளின் ஆத்மா சாந்தியடையவும், பிரிவால் துயருறுகின்ற ஆசிரியரும் அவரது குடும்பத்தினரும் ஆறுதலடைய ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை சமூகம்
யா/கொழும்புத்துறை சென். ஜோசப்ஸ் வித்தியாலயம்.

# INVITATION FOR BID (IFB)
## Provincial High Court Northern Province, Jaffna
## Procurement of Cleaning and Sanitary Services – 2023

01. The Chairman, High Court Procurement Committee, Northern Province Jaffna now invites sealed bids from eligible and qualified bidders, who have at least service station or branch in Jaffna District, for the service mentioned below in the schedule.
02. Bidding will be conducted through National Competitive Bidding (NCB).
03. Interested bidders may obtain further information from the Procurement Unit, Provincial High Court, Jaffna (Financial Branch) and inspect the Bidding Documents at the same address on any working day from 9.00 a.m to 3.00 p.m from 10.11.2022
    Contact numbers are
    Phone : 0212222582/0212226388
    Facsimile : 0212222582/0212226388
04. A complete set of Bidding Documents in English language could be purchased by interested bidders on submission of a written application to the Procurement Unit, Provincial High Court, Jaffna from 10.11.2022 to 29.11.2022 from, 9.00 a.m to 3.00 p.m upon the payment of a non- refundable fee as described in the schedule below.
05. Sealed bids shall be sent by registered post addressed to the The Chairman, High Court Procurement Committee, Northern Province Jaffna or deposited in the Tender Box available at the Procurement Unit, High Court Jaffna on or before 30.11.2022 at 2.00 p.m. Late bids will be rejected. Bidders should write the service description and bid No. on the top left hand corner of the envelope. Bids will be opened at 2.00 p.m. on the same day in the presence of the bidders or bidders' representatives who choose to attend. Original and duplicate should be submitted separately for each Court.
06. Bid shall be valid for a period of 77 days from the last date (30.11.2022) fixed for receiving of Bids or any extended period & bid security should be valid for 105 days from the bid opening.
07. Procurement Committee will keep the right to make final decision about accept or reject Bids and it will be the final decision regarding the bids.
08. The details of the bids are given overleaf:

| S.No | Bid ID. | Description of Service | Estimated Amount (million) (Excluding VAT) | Required Bid Security | | Non Refundable Fee (Rs.) |
|---|---|---|---|---|---|---|
| | | | | Security Amount (Rs.) | Vaild Period Until | |
| 01 | HCJ/PROC/Serv. (Clean) / 01/01/2022 | Cleaning Service for Courts Complex Jaffna | 4.0 | 25000/- | 14.03.2023 | 2000/- |
| 02 | HCJ/PROC/Serv. (Clean) / 02/01/2022 | Cleaning Service for District and Magistrate's Courts Complex Mallakam | 3.5 | 25000/- | 14.03.2023 | 2000/- |
| 03 | HCJ/PROC/Serv. (Clean) / 03/01/2022 | Cleaning Service for District and Magistrate's Courts Complex Point Pedro | 3.0 | 25000/- | 14.03.2023 | 2000/- |
| 04 | HCJ/PROC/Serv. (Clean) / 04/01/2022 | Cleaning Service for District and Magistrate's Courts Complex Chavakachchery | 3.0 | 25000/- | 14.03.2023 | 2000/- |
| 05 | HCJ/PROC/Serv. (Clean) / 05/01/2022 | Cleaning Service for District and Magistrate's Courts Complex Kayts | 3.0 | 25000/- | 14.03.2023 | 2000/- |
| 06 | HCJ/PROC/Serv. (Clean) / 06/01/2022 | Cleaning Service for Juvenile Magistrate's Court Jaffna | 1.5 | 25000/- | 14.03.2023 | 2000/- |

09. Pre bid meeting will be held at Provincial High Court Jaffna, on 21.11.2022 at 2.00 p.m.

**The Chairman,**
**High Court Procurement Committee**
**Provincial High Court**
**Northern Province, Jaffna.**

(CR 38467) (3/6)

*தொடர் மழையால்*
# மரக்கறிகளின் விலை உயர்வு



சாவகச்சேரி, நவ. 10
தென்மராட்சிப் பிரதேச சந்தைகளில் கீரை உள்ளிட்ட மரக்கறிகள் பலவற்றின் விலை அதிகரித்துள்ளது.
ஒரு பிடி கீரை 200 ரூபாவுக்கும் கத்தரிக் காய் , பயிற்றங்காய், பாவற்காய், தக்கா ளிப்பழம் போன்றவை கிலோ 500 ரூபா வரையிலும் விற்கப்படு கின்றன.
தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழையால் கீரைப் பாத்திகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் சந்தைக்கு வரும் கீரைகளின் எண்ணிக்கை குறைவ டைந்துள்ளதால் விலை அதிகரித்துள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.
அத்துடன் தம்புள்ளவிலிருந்து மரக்கறி வகைகள் வருகையின்மையாலும் இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது எனவும் வியாபாரிகள் தெரிவித் துள்ளனர்.
(ஒ-14,9)

## மறவன்புலவு விவசாயிகளுக்கு இரண்டாம் கட்ட யூரியா இன்று

சாவகச்சேரி, நவ. 10
தென்மராட்சி தெற்கு மறவன்புலவு கமக் கார அமைப்பைச் சேர்ந்த விவசாயிக ளுக்கான இரண்டாம் கட்ட யூரியா உரம் கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் இன்று வியாழக்கிழமை வழங்கப்பட வுள்ளன.
முதல் கட்டத்தில் விநியோகிக்கப்பட்ட யூரி யாவை விட இரு மடங்கு யூரியா இரண் டாம் கட்டத்தில் விநியோகிக்கப்படவுள்ளன.
அதற்கமைய முதலாம் கட்டமாக உரம் வழங்கப்பட்ட போது பெற்றுக் கொள்ளாத வர்களும் இன்று பெற்றுக் கொள்ளலாம் என்று அமைப்பின் தலைவர் சி.திருஞா னசம்பந்தர் அறிவித்துள்ளார். (ஒ-14,9)

## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணம் ரவுண், பிரபல **புத்தக சாலைகக்கு காசாளர், உதவி விற்பனையாளர்** உடன் தேவை.
077 663 9304, 072 287 5625

## வேலையாட்கள் தேவை

வைத்தியசாலை சுத்திகரிப்பாளர் ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
நரம்பியல் புனர்வாழ்வு சிகிச்சை நிலையம்.
**Institute of Medical Sciences**
**Green Memorial Hospital**
மானிப்பாய்
தொடர்பு: 0760477106, 0212256990

## பூசகர் தேவை

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவிலுக்கு நித்திய பூசை செய்வதற்கு
முன் அனுபவம் உள்ள பூசகர் தேவை.
தொடர்பு: 10,11,12,13ஆகிய திகதிகளில் பி.ப.5 மணி முதல் பி.ப. 5. 30 மணிவரை.
366, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்காம் ஆண்டு நினைவு தினம்

## அமரர் கோபாலகிருஸ்ணன் சாரங்கன்



(யாழ்.இந்துக் கல்லூரியின் பழைய
மாணவனும்,
சப்ரகமுவ பல்கலைக்கழக
3 ஆம் வருட மாணவனும்)

சாரங்கம் எனும் சரித்திரப்படைப்பில்
சாரங்கன் எனும் சாமாக்கியனாய்
- உருவெடுத்து
விதி விலங்கில் கைதியாகி
சரித்திரம் முற்றுப்பெற....
இருபத்தைந்து வருட உணர்வுகளை
நான்கு வருட நினைவுகளாக்கி
- சென்றுவிட்டாய்.

அன்னை மடியில் 17.05.1993
ஆண்டன் அடியில் 10.11.2018

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS 21759) (2/6)

# அறிவித்தல்

## மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

குடியியில் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின்
பிரிவு 16இன் கீழான அறிவித்தல்

வழக்கு இல. TR/29/20

1. ஆறுமுகம் சிவகுமார் (தலைவர்)
2. நடேசலிங்கம் ஜெகதீபன் (உப தலைவர்)
3. கார்த்திகேசு சிவஞானசுந்தரம் (செயலாளர்)
4. கந்தையா அருள்லிங்கம் (உப தலைவர்)
5. செல்லத்துரை மகேந்திரராசா (பொருளாளர்)
6. தர்மராசா தினேஸ்
7. தில்லைக்கோன் பிரணவதாஸ்
8. சோதிலிங்கம் சதீஸ்
9. கந்தையா மகேந்திரன்

அனைவரும் கூடத்து மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபை உறுப்பினர்கள்

மனுதாரர்கள்

இவ் வழக்கானது மேற்படி மனுதாரர்களினால் கௌரவ இம் மன்றில் 23.06.2020 ம் திகதி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் பிரதான நிவாரணமாக வேண்டப்பட்டவாறு "மனுவில் விபரிக்கப்படுவதும். கூடத்து மனோன்மணி அம்மாள் ஆலயத்திற்கு உரித்தான ஆதனங்களிற்கு மனுதாரர்களே என்ற ஒப்படைப்பு கட்டளை (westing order) உரித்துடையவர்கள்" என்ற கட்டளை கோரியுள்ளமையால்

மேற்படி ஆலயத்துடன் தொடர்புடைய எவரும். எதிர்வாதிட அக்கறையுள்ள எவரும் இதன் பின் ஆதன அட்டவணையில் விபரிக்கப்படும் ஆதனங்கள் தொடர்பில் அல்லது மேலே மனுதாரர்களால் கோரப்பட்ட நிவாரணம் வழங்குவது தொடர்பில் ஆட்சேபனை இருப்பின் 29.11.2022ம் திகதி காலை 9.00 மணிக்கு கௌவர மன்றில் தோன்றி தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

நீதிமன்ற கட்டளைப்படி

வரைவு
மனுதாரரின் சட்டத்தரணி
திருமதி அ. கீர்த்தனா

பதிவாளர்

### மல்லாகம் மாவட்ட நீதிமன்றில்

### வழக்கு இலக்கம்: நம்பிக்கைச் சொத்து 29/2020

### ஆதன இடாப்பு

01. வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்கு பகுதி சங்கானை கோவிற்பற்று சங்கானை கிழக்கு இறை "மலப்பைவளவு" நிலப்பரப்பு.7. இதற்குள் அமையும் சங்கானை கூடத்து மனோன்மணி அம்பாள் ஆலயம். இதற்கு எல்லை கிழக்கு துரைசிங்கம் பெண் செல்வராணிக்குரிய ஆதனம். வடக்கு பிரதான வீதி. மேற்கு கையொழுங்கை. தெற்கு குறித்த செல்வராணிக்கும் கந்தையா பாலசிங்கத்துக்குமுரிய ஆதனங்கள் இவ்வெல்லைப்படி இதடங்கலும்.

02. மேற்படி சங்கானை கிழக்கு இறை "வேலிலோவத்தை" பர.நில இலா.20 ம் பனைகளும். இந்தப் பரப்பு இலாச்சம் இருபதுக்கும் எல்லை கிழக்கு குமாரசாமி சண்முகரத்தினத்திற்கும் செல்லத்துரை மகேந்திரராசாவுக்குமுரிய ஆதனங்கள். வடக்கு வயிரமுத்து நேருவின் ஆதனம் . மேற்கு தபாற் கந்தோர் வீதி. தெற்கு நடராசா மகேந்திரனுக்கும் தம்பிராசா ஜெய்சிங்கத்திற்குமுரிய ஆதனங்கள். இவ்வெல்லைப்படி இதடங்கலும்.

03. மேற்படி சங்கானை கிழக்கு இறை " மலப்பைவளவு" பர.நில .இலா.12.இதற்கு எல்லை கிழக்கு செல்லையா சிவபாக்கியத்தின் ஆதனம். வடக்கு நவரட்ணம் துரைசிங்கத்தின் ஆதனம். மேற்கு சண்முகம் கனகரத்தினத்தின் ஆதனம். தெற்கு முருகமூர்த்தி கோவில் ஒழுங்கை. இவ்வெல்லைப்படி இதடங்கலும்.

04. மேற்படி சங்கானை கிழக்கு இறை 'வெல்வில்வளவு" பர. நில. இலா.10 - இதற்கு எல்லை கிழக்கு றோட்டு. வடக்கு நல்லதம்பி செல்வராசாவின் ஆதனம் - மேற்கு இராசையா பெண் கனகம்மாவின் ஆதனம். தெற்கு தேவாலய வீதி. இவ்வெல்லைப்படி இதடங்கலும்.

05. மேற்படி சங்கனை கிழக்கு இறை "புதுரன்குளி" பர.நில. இலா 15ம் கிணறும் இதற்கு எல்லை கிழக்கு சின்னையா இரத்தினத்தின் ஆதனம். வடக்கு ஒழுங்கை - மேற்கு சின்னையா இரத்தினத்தின் ஆதனம். தெற்கு கதிரன் முத்தனின் ஆதனம். இவ்வெல்லைப்படி இதடங்கலும்.

06. மேற்படி சங்கானை கிழக்கு இறை " மடத்துவளவு" பர.நில. இலா.02ம் - வீடும். இதற்கு எல்லை கிழக்கு தேவாலய வீதி. வடக்கு பிரதான வீதி. மேற்கு பொன்னையா நவரத்தினத்தின் ஆதனம். தெற்கு முத்தையா ஐயாத்துரையின் ஆதனம்.இவ்வெல்லைப்படி இதடங்கலும்.

07. மேற்படி சங்கானை கிழக்கு இறை "கலட்டி"பர. நில.இலா 10. இதற்கு எல்லை கிழக்கு நன்கொடை பெறுனரின் ஆதனம். வடக்கு பிரதான வீதி. மேற்கு தேவாலய வீதி. தெற்கு சிவகுமாரன் பெண் செல்வராணிக்கும் மறு பேருக்குமுரியவாதனம் இவ்வெல்லைப்படி இதடங்கலும்.

08. மேற்படி சங்கானை கிழக்கு இறை " தானாவோடை" பர.நெ. இலா.16 இதற்கெல்லை கிழக்கு கந்தையா செல்லத்துரையின் ஆதனம். வடக்கு ஆறுமுகம் நாகலிங்கத்தின் உரிமைக்காரரின் ஆதனம். மேற்கு சண்முக தம்பையாவின் ஆதனம். தெற்கு வல்லிபுரம் சண்முகநாத முதலிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். இவ்வெல்லைப்படி இதடங்கலும்.

09. மேற்படி சங்கானை கிழக்கு இறை "எல்லைப்புலம்" பர.நெ. இலா.02.இதற்கெல்லை கிழக்கும் வடக்கும் சிவநேசன் பெண் பத்மராணியின் ஆதனம், மேற்கு சுந்தரம்பிள்ளை நாகேஸ்வரியின் ஆதனம். தெற்கு நடராசா பெண் தனலட்சுமியின் ஆதனம். இவ்வெல்லைப்படி இதடங்கலும்.

10. மேற்படி சங்கானை கிழக்கு இறை " எல்லைப்புலம்" பர.நெ. இலா.02. இதற்கு எல்லை கிழக்கு சுந்தரம்பிள்ளை நாகேஸ்வரியின் ஆதனமும் தம்பிநாதர் சபாபதியின் ஆதனமும். வடக்கு சிவநேசன் பெண் பத்மராணியின் ஆதனம். மேற்கும் தெற்கும் தம்பிநாதர் செல்வநாயகத்தின் ஆதனம். இவ்வெல்லைப்படி இதடங்கலும்.

11. மேற்படி சங்கானை கிழக்கு இறை "தானாவோடை" பர. நெ.இலா.20.இதற்கு எல்லை கிழக்கு ஆறுமுகம் நாகலிங்கத்தின் ஆதனம். வடக்கு ஆறுமுகம் சண்முகநாதமுதலிக்கும் கமலநாதன் நாகேஸ்வரிக்குமுரிய ஆதனங்கள். மேற்கு மாரிமுத்து நாகம்மாவின் ஆதனம். தெற்கு கந்தையா சண்முகதாசனின் ஆதனம். இவ்வெல்லைப்படி இதடங்கலும்.

12. மேற்படி சங்கானை கிழக்கு இறை " கரைச்சி " பர. நெ.இலா.20. இதற்கு எல்லை கிழக்கு வாய்கால். வடக்கு வல்லிபுரம் சின்னத்துரையின் ஆதனம். மேற்கும் தெற்கும் எஸ் சிவஞானத்தின் ஆதனம். இவ்வெல்லைப்படி இதடங்கலும்.

13. மேற்படி சங்கானை கிழக்கு இறை " ஆலங்கடல்" பர.நில.இலா.12. இதற்கு எல்லை கிழக்கும் வடக்கும் எஸ் சிவஞானத்தின் ஆதனம். மேற்கு நல்லதம்பி செல்வராசாவின் ஆதனம். தெற்கு சுப்பு நாகலிங்கத்தின் ஆதனம். இவ்வெல்லைப்படி இதடங்கலும்.

14. மேற்படி சங்கானை கிழக்கு இறை " கலட்டி" நிலப்பரப்பு 13 1/4. இதற்கு எல்லை கிழக்கு ஒழுங்கை நிலம். வடக்கு யாழ் பிரதான வீதி. மேற்கு இதன் மிகுதி ஆதனம். தெற்கு சிவகுமாரன் செல்வராணியினதும் மறுபேரினதும் ஆதனம். தெற்கெல்லையில் இதனுள் அடங்கும் அரைவாசிக் கிணறும் மற்றும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

நீதிமன்ற கட்டளைப்படி

வரைவு
மனுதாரரின் சட்டத்தரணி
திருமதி அ. கீர்த்தனா


பதிவாளர்

(CS 21754) (3/6)

# மரண அறிவித்தல்

## சின்னப்பு நடேசபிள்ளை (பி.க. பணிப்பாளர்)

## புவனேஸ்வரி நடேசபிள்ளை (தம்பதியினர்)





நயினாதீவு 5 ஐப் பிறப்பிடமாகவும் அவுஸ்ரேலியாவை வதிவிடமாகவுங் கொண்ட சின்னப்பு நடேசபிள்ளையும் அவரின் அன்புத் துணைவி புவனேஸ்வரியும் (05.11.2022) இல் அவுஸ்ரேலியாவில் கார் விபத்தில் அகாலமரணமடைந்துள்ளனர்.

சின்னப்பு - சின்னம்மா, பொன்னம்பலம் - சின்னம்மா இவர்களின் பெற்றோர்களாவர். நேசலெட்சுமி, விமலாம்பிகை, தையல்நாயகி, பதுமாதேவி, வேன்முருகோன்பிள்ளை, சோமேஸ்வரபிள்ளை ஆகியோர் இவரின் உடன் பிறப்புக்கள், இரத்தினசபாபதி. சோமசுந்தரம், காசிலிங்கம், லாடாதேவி அவவின் உடன்பிறப்புகளாவர், ஞானபோதினி, Dr.சுபநேசன், திருநேசன் (பொறியியலாளர்), ஞானமஞ்சரி ஆகியோரின் பெற்றோரும், நகுலன், விஜயந்தி, சுகந்தினி, ராஜ்குமார் இவர்களின் அன்பு மாமன் மாமியும், சதீஸ், நிரோஷ், தீபிகா, சசிக்கா, ஹரிஷ், திரிஷ்ண ஆகியோரின் பேரன், பேர்த்தியும், வீரகத்தி, கனகரெத்தினம், நடராசா, ஓங்காரலெட்சுமி, பரராஜசிங்கம், நகுலேஸ்வரி, ஆகியோரின் மைத்துனர் மைத்துனிமாரும் சகலியும், சிவகாமசுந்தரி, சரஸ்வதி, விநாயகமூர்த்தி, அற்புதராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சகலனுமாவார்.

அன்னார்களின் இறுதிக்கிரியைகள் அவுஸ்ரேலியாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
எஸ்.சோமேஸ்வரபிள்ளை
தாவடி

37/3, மானிப்பாய் வீதி,
தாவடி, கொக்குவில்.

(CS 47547) (3/6)

ஓம் வீராட் விஸ்வப் ப்ரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



## சுப்பிரமணியம் பத்தர் நடராஜா

யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வதிவிடமாகவும் இலண்டனை வாழ்விடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பத்தர் நடராஜா அவர்கள் கடந்த (08.11.2022) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சுப்பிரமணியம் - சரஸ்வதி அவர்களின் பாசமிகு மகனும், திருமதி பிறேமாவதி (இலண்டன்) அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற திரு.திருமதி குமாரசாமி, பேபி அவர்களின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கனகரட்ணம், செல்வராஜா, மற்றும் செல்வராணி, அன்னராணி, பவளராணி, கமலராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற பியசேனா, ஜெயசேகரா மற்றும் சூரியகலா, தவஜோதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், செந்தூரன் (இலண்டன்), காண்டீபன் (இலண்டன்), திலீபன் (இலண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நீலுஜா (இலண்டன்), துளசி (இலண்டன்), நிடிஜா (இலண்டன்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொலைபேசி இலக்கம்:

| | |
|---|---|
| செந்தூரன் (மகன்) | : 075 186 2774 |
| தவஜோதி (மைத்துனர்) | : 077 167 3163 |
| நகுலன் (மருமகன்) | : 077 617 6462 |
| சுதன் (பெறாமகன்) | : 077 591 3952 |

தகவல் : குடும்பத்தினர்
'ஸ்ரீரங்கம்'
கேணியடி வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(CS 21756) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## விவசாய நிலங்களினூடாக சட்டவிரோத மணல் அகழ்வு

கிளிநொச்சி, நவ. 10

கண்டாவளைப் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட நெத்தலியாறுப் பகுதியில் விவசாய நிலங்களினூடாக சட்டவிரோதமாக மணல் அகழ்வு இடம் பெற்று வருகின்றது என்று அந்தப்பகுதி விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் விவசாயிகள் தெரிவிக்கையில், நெத்தலியாறு மற்றும் புளியம்பொக்கணை ஆகிய இடங்களில் பெரும்போக விவசாயம் மேற்கொள்ளப்பட்ட பகுதிகளினூடாகச் சென்று மணல் அகழ்வில் ஈடுபடுகின்றனர்.

இதன் காரணமாக எமது பயிர் நிலங்கள் பாதிக்கப்படுவதோடு ஒவ்வொரு வருடமும் வயல்களை மீள புனரமைத்து பயிர்செய்கை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கின்றோம் - என்றனர். (ஒ-14,113)

## வரிசைகளை மீள உருவாக்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள்

### சட்டம் பாயுமென எச்சரிக்கை

கொழும்பு, நவ. 10

**எரிபொருளை விநியோகிப்பதில் தயக்கம் காட்டும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு பெற்றோலியத்துறை அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.**

கடந்த சில நாள்களாக எரிபொருள் விலையில் மாற்றம் ஏற்படும் என வெளியான தகவலுக்கமைய பல எரிபொருள் நிரப்பு நிலையங்கள் எரிபொருளை முன்பதிவு செய்யவில்லை.

எரிபொருள் விலைச்சூத்திரத்தின்படி எரிபொருளின் விலைகள் குறையலாம் என எரிபொருள் விநியோகஸ்தர்கள் அவற்றைக் கொள்வனவு செய்து விநியோகிப்பதில் தயக்கம் காட்டியுள்ளனர்.

இதனால் நாடளாவிய ரீதியில் பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டிருந்ததோடு சில எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் நீண்ட வரிசைகளும் காணப்பட்டன.

எனவே நுகர்வோருக்கு எரிபொருளை வழங்காது மீண்டும் எரிபொருள் வரிசையை உருவாக்க முனையும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என பெற்றோலியத் துறை அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## தொடர் மழையால் வீடுகள் பாதிப்பு

தற்போது பெய்து வரும் தொடர் மழையால் தென்மராட்சிப் பகுதியில் இரு வீடுகள், பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்று பிரதேச இடர்கால முகாமைத்துவ அலகுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

வரணி வடக்கு , மறவன்புலவு ஆகிய இடங்களில் இரு வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன என பிரிவு கிராம அலுவலர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழையால் எதிர்வரும் நாள்களில் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனவும் இடர்கால முகாமைத்துவ அலகால் தெரிவிக்கப்பட்டது. (ஒ-14,9)

## நூல் அறிமுகம்

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ். பல்கலைக்கழக வேந்தர் தகைசார் பேராசிரியர் சி.பத்மநாதனின் 'திருக்கோணேஸ்வரம்' நூல் வெளியீடு எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு திருகோணமலை நகரசபை வளாகத்தில் இடம்பெறவுள்ளது. (ச)

### காரைநகரின் நிலைபேறான அபிவிருத்தி

## தவிசாளரால் நகரசபைக்கு திட்டமொழிவு சமர்ப்பிப்பு!

யாழ்ப்பாணம், நவ. 10

காரைநகரின் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பிலான திட்டமுன்மொழிவு அறிக்கை காரைநகர் பிரதேச சபை தவிசாளர் க.பாலச்சந்திரனால் யாழ். நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகளுடன் காரைநகரின் நிலைபேறான அபிவிருத்தி சம்பந்தமாக காரைநகர் பிரதேசசபையின் ஐவர் அடங்கிய குழு கடந்த மாதம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டது. இதன்போதே குறித்த திட்டமொழிவு அறிக்கை தவிசாளரால் சமர்ப்பிக்கப்பட்டது.

அந்தத் திட்டமொழிவு அறிக்கையில், காரைநகருக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையிலான மேம்பாலம் துறைமுகப் பகுதியில் இருந்து அமைத்தல், பொன்னாலை பாலத்தில் யாழில் இருந்து வரும்போது வலது பக்கமாக உள்ள வேணன் அணைக்கட்டை உல்லாசப் பயணிகளுக்கு கவரும் வண்ணம் வீதியாக மாற்றி கசூரினா சுற்றுலா மையம் ஊடாக நீலங்காடு வரை 'காப்பெற்' வீதியாக செப்பனிடல், காரைநகர் சுற்றுவட்ட வீதியை அகலப்படுத்தி 'காப்பெற்' வீதியாக செப்பனிடல். மழைநீர் சேமிப்பதற்கும் வெளியேற்றுவதற்குமான திட்டத்தை தயாரித்தல், 1990 ஆம் ஆண்டுக்கு முன்பு துறைமுகத்திலிருந்து எழுவைதீவு நயினாதீவு நெடுந்தீவுக்கான கடல் போக்குவரத்து நடைபெற்றது. தற்போது சேவைகள் நடைபெறுவதில்லை மீண்டும் இடம்பெற வேண்டும், பனம் பொருள்கள், கடல் உணவுகள் போன்றவற்றை சந்தைப்படுத்துவதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதோடு, அதனுடன் சார்ந்த சந்தைப்படுத்துவதற்கான வசதிகள், தொழிற்சாலைகள் நிறுவி நவீன தொழிற் பயிற்சிகள் ஆகியவற்றை வழங்கி பிரதேச இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பு ஏற்படுத்தல், வடமாகாண சுற்றுலாத் துறை அமைச்சினால் கசூரினா சுற்றுலா மையத்துக்காக வரையப்பட்ட திட்டங்களை விரைந்து முடிவுறுத்துவதற்கு மேலதிக நிதியை விடுவித்தல், சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக காரைநகர் வெளிச்சவீட்டை பிரதேச சபைக்கு கையளிப்பதுடன் அதனை புனருத்தானம் செய்வதற்கான உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்,சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக பொருத்தமான இடம் இனம் காணப்பட்டு கேபிள் கார் அமைத்தல், சபைக்குச் சொந்தமான காணியில் யாத்திரிகர் விடுதியை அமைத்தல், சூரியமின் உற்பத்தி நிலையங்களையும் காற்றாலை உற்பத்தி நிலையங்களையும் அமைத்தல் போன்ற விடயங்கள் உள்ளடக்கிய முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (ச-...)




டேவிட் பீரிஸ் நிறுவனத்தில் தொழில்நுட்பப் பயிற்சியை நிறைவு செய்த பெண்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு, யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

இதன்போது பயிற்சியை நிறைவு செய்த பெண்களுக்கு சான்றிதழ்களும் தொழில் உபகரணங்களும் பரிசில்களும் வழங்கப்பட்டன. நிகழ்வில் டேவிட் பீரிஸ் நிறுவனத்தின் அதிகாரிகள், அரச மற்றும் சமூக அமைப்புகளின் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஒ-14)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தாயின் மடியில்
24 . 10 . 1952



இறைவன் அடியில்
09 . 11 . 2022

## திரு. வெங்கையா சுந்தரலிங்கம்

**(முன்னாள் அதிபர் – திருகோணமலை தொழில்நுட்பக் கல்லூரி, முன்னாள் மேலதிக கல்விப் பணிப்பாளர் – யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரி , சமாதான நீதவான்)**

மடத்தடி மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், இல.70, முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வெங்கையா சுந்தரலிங்கம் (ஓய்வுநிலை முன்னாள் தொழில்நுட்பக் கல்லூரி மேலதிகக் கல்விப் பணிப்பாளர்) நேற்று (09.11.2022) புதன்கிழமை சாயிநாதனின் பாதம் சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வெங்கையா தனலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தம்பிராசா சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் ராகினியின் பாசமிகு கணவரும், Dr.கௌதமி (வைத்தியர் - யாழ்.போதனா வைத்தியசாலை), ஹம்சாயினி (ஆசிரியர், புங்குடுதீவு சித்திவிநாயகர் மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சிவோதயனின் (சிரேஷ்ட உதவி , முகாமையாளர், செயற்பாடுகள் Ceylinco Life), அன்பு மாமனாரும், அமரர் மகாலிங்கம், அமரர் நாகேஸ்வரி, அமரர் தர்மலிங்கம், லோகேஸ்வரி, தனபாலசிங்கம், குணபாலசிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.11.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**0773485535**
**0773434973**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



## திருமதி கணபதிப்பிள்ளை தில்லைநாயகி

**(தில்லையாச்சி)**

பூநகரி மறவகுறிச்சியைப் பிறப்பிடமாகவும் இல.49, இராணி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையாச்சி என செல்லமாக அழைக்கப்படும் திருமதி கணபதிப்பிள்ளை தில்லைநாயகி கடந்த (08.11.2022) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் நாகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், பாலசிங்கம் (ஓய்வுநிலை பிரதேச சபை செயலாளர்-பூநகரி), மகேஸ்வரி, வடிவேல் (ஓய்வுநிலை அதிபர்- யா/ நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான யோகராணி, நடேசு மற்றும் யோகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கணபதிப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான கந்தையா, சிதம்பரம், திசநாதன் மற்றும் இரத்தினசிங்கம், வேலாயுதபிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரியும், இராசமணி, சிவபாக்கியம், காலஞ்சென்ற இராசையா மற்றும் தங்கம்மா, குலதேவி, சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சாந்தரூபன், மோகனரூபன், ஜெகரூபன், சுரேஸ்குமார், றமேஸ்குமார், அமுதினி, நரேஸ்குமார், கஜேந்திரா, விஜேந்திரா, வனஜா, லோபனா, சுஜேந்திரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சுரபி, மேகவி, சிவந்தன், ஆயிஷா, சுஷாந், நிவேதிதா, ஆதிரை, ஆரணியன், லக்ஷனா, ஜானுஷன், விகாஷினி, வாகினி, நிருண், றக்ஷன், சாம்பவி ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.49, இராணி வீதி நல்லூரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (10.11.2022) வியாழக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**077 414 6181**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 21764) 1/6

# 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 12.10.2022 புதன்கிழமை திருதியை திதியில்
சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர்
## செல்லையா சண்முகம்(V.C)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (10.11.2022) வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் ஆலங்கன்று வைரவர் அந்தியேட்டி மடத்திலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (11.11.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு உடன்வந்து உதவியோருக்கும் தொலைபேசி மற்றும் நவீன தொடர்பு சாதனங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் மலர் வளையங்கள், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள், பதாகைகளூடாகவும் எங்கள் துயரத்தில் பங்குகொண்டவர் களுக்கும், இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு பல்வேறு வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**“இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்”**

**தோற்றம்** **30.01.1944** **மறைவு** **12.10.2022**

[illegible]காடு, காரைநகர்.
தொ.பே: 077 354 8473

**குடும்பத்தினர்**

(CS 21769) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரணி உறுப்பினர்களை விலைக்கு வாங்க முயற்சி!

## அரசாங்கத்தை கடுமையாக சாடுகின்றது எதிர்க்கட்சி

கொழும்பு, நவ. 10
எதிரணி அரசியல் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்க அரசு முயற்சித்து வருகின்றது. நாட்டையும் மக்களையும் ஏமாற்றும் அத்தியாயம் ஒன்று இன்று மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.
இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.
நாளுக்கு நாள் கூடி, விவாதங்களை நடத்தி, நாட்டை அலைக்கழித்து, கலைந்து செல்வதைத் தவிர நாட்டைக் கட்டியெழுப்பும் எந்தவொரு வேலைத் திட்டமும் அரசிடம் இல்லை என்றும் அவர் சாடியுள்ளார்.
நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
சர்வதேச நாணய நிதியத்துக்கு வழங்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் எவை என வெளியிடவேண்டும். நாடு வீழ்ந்துள்ள வங்குரோத்து நிலையிலிருந்து மீட்கும் எந்தவொரு திட்டமும் அரசிடம் இல்லை. போஷாக்கின்மையால், பட்டினியால் சிறுவர்கள் வாடி பாடசாலைகளில் மயங்கி விழுகின்றனர். அவற்றை அம்பலப்படுத்தும் அதிகாரிகளுக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. தற்போதைய ஜனாதிபதி நான்கு பில்லியன் அமெரிக்க டொலரை கைவசம் வைத்துக்கொண்டு ஜனாதிபதி பதவியைப் பெற்றுக்கொண்டேன் என்று கூறியிருந்தார். அந்தப் பணம் தற்போது எங்கே உள்ளது?
சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகள் கூட இன்று மாறினாலும் அரசின் கொள்கைகள் மாறாதுள்ளமை வருத்தத்தையும் துயரத்தையும் அளிக்கின்றது.
இத்தனைக்கும் மத்தியில் பல்வேறு எதிரணி அரசியல் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்க அரசு முயற்சித்து வருகின்றது. இந்த முட்டாள்தனமான அரசில் இணைவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து எவரும் தயார் இல்லை.
அரசியல் பொறாமையும் கபடமும் நிறைந்த அரசால் இந்நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. பொருளாதாரத்தைச் சுருக்கி நாட்டைக் கட்டியெழுப்புவோம் என்ற மாயையை முன்வைத்து அரசின் அமைச்சுப் பதவிகள் அதிகரிக்கப்படுகின்றன - என்றார். (அ-எ-22)

### 81 மாணவர்கள்...

சேர்க்கப்பட்டுள்ளனர் என கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.
புனர்வாழ்வு முகாம்களில் சேர்க்கப்பட்டுள்ள மாணவர்களில் மூவர் 14 வயதுக்கு உட்பட்டவர்கள் என்று தெரிவித்துள்ள அவர், 78 பேர் 15 முதல் 19 வயதுக்குட்பட்டவர்கள் என்றும் குறிப்பிட்டார்.
ஜனவரி முதல் செப்ரெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் இவர்கள் போதைப்பொருளுக்கு புனர்வாழ்வளிக்கும் முகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்று தெரிவித்த கல்வி அமைச்சர், ஐஸ்போன்றமிகவும் ஆபத்தானபோதைப் பொருள்களுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தற்போதைய சட்டங்கள் போதுமானவை இல்லை என்று சுட்டிக்காட்டியுள்ளார். (அ-எ-இ)

### குரங்கு...

டுபாயில் இருந்து நாடு திரும்பிய ஒருவருக்கே குரங்கு அம்மை தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.
இவர் தற்போது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
டுபாயில் இருந்து நாடு திரும்பிய ஒருவர் குரங்கு அம்மைத் தொற்றுக்குள்ளாகியிருந்தமை கடந்த 3ஆம் திகதி கண்டறியப்பட்டது. இவரே இலங்கையில் அடையாளம் காணப்பட்ட முதலாவது குரங்கு அம்மைத் தொற்றாளராவார். களனியைச் சேர்ந்த 20 வயதான இவர் தொடர்ந்தும் சிகிச்சையில் உள்ளார். (அ-எ-இ)

### முல்லைத்தீவில்...

எதிர்கொண்டுள்ள நிலையில், வட்டுவாகல் மற்றும் சாலைக் கடல் நீரேரிகளை வெட்டி விடவேண்டுமென்று மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். மழை வெள்ளம் தேங்கியுள்ளதால் விவசாய நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன என்று பொதுமக்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.
முல்லைத்தீவு மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு இது தொடர்பில் தீர்மானம் எடுத்து, நேற்று மாலை வட்டுவாகல் கடல் நீரேரியை வெட்டி விட்டுள்ளனர்.
முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன், மேலதிக மாவட்டச் செயலர்களான க.கனகேஸ்வரன், எஸ்.குணபாலன், மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் எஸ்.லிங்கேஸ்வரகுமார், கரைதுறைபற்று பிரதேச சபை தவிசாளர் க.விஜிந்தன், கரைதுறைப்பற்று பிரதேச செயலர், கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர், முல்லைத்தீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, படையினர், வட்டுவாகல் கடற்றொழிலாளர்கள் ஆகியோர் முன்னிலையில் ஆலய வழிபாட்டுடன் கனரக இயந்திரம் கொண்டு வட்டுவாகல் கடல் முல்லைத்தீவு பெருங்கடலுடன் வெட்டிவிடப்பட்டது. (அ-எ-19)

### அகதிகள்...

செல்வதற்காகப் பயணித்துள்ளனர். இவர்கள் கனடாவுக்குச் செல்லவே முயற்சித்துள்ளனர் என்று தெரியவருகின்றது.
படகில் ஏறுவதற்கு முன் ஆள்கடத்தல்காரர்களுக்கு பெருந்தொகைப் பணம் கொடுத்துள்ளனர் என்றும் அறியமுடிகின்றது.
சேதமடைந்த மீன் பிடிக் கப்பல் ஒன்றில் இருந்து மீட்கப்பட்ட அகதிகள் ஜப்பானுக்குச் சொந்தமான "ஹெலியோஸ் லீடர்" என்ற கப்பலில் ஏற்றப்பட்டு, அங்கு வைத்து மருத்துவக் குழு ஒன்றால் பரிசோதிக்கப்பட்டனர். அவர்களில் சிலருக்கு நெரிசல் காரணமாகச் சிறு காயங்கள் ஏற்பட்டிருந்தன. ஆயினும் பெரும்பாலானோர் ஆரோக்கியமான நிலையில் காணப்படுகின்றனர் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பின்னர் அவர்கள் அதிலிருந்து கடற்படைக் கப்பல்களுக்கு மாற்றப்பட்டனர்.
அகதிகள் 303 பேரும் நேற்று கப்பலில் இருந்து பகுதி பகுதியாக இறக்கப்பட்டு கடற்படைக் கப்பல்கள் மூலம் வியட்நாம் நாட்டின் வுங் தோ நகருக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். அவர்களை அங்கு கரையோரக் காவல் படை முகாமிலும் இராணுவத் தளங்களிலும் உள்ள வாடி வீடுகளில் தங்க வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
அவர்கள் சர்வதேச தொண்டு நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைக்கப்படுவார்கள் என்றும், அதன்பின்னர் அவர்கள் சொந்த நாட்டுக்கு அனுப்பப்படுவார்கள் என்றும் சர்வதேசச் செய்திகள் கூறுகின்றன.
அதேவேளை, படகு மூலம் சென்றவர்களில் யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆள்கடத்தல்காரர்களால் தொடர்ந்தும் தவறான தகவல்கள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று கூறப்படுகின்றது. அவர்கள் தொடர்ந்தும் கடற்பயணத்தை மேற்கொண்டுள்ளார்கள் என்றும், எதிர்பார்த்த நாட்டைச் சென்றடைவார்கள் என்றும் குடும்பங்களுக்குக் கூறப்பட்டு வருகின்றது என்று தெரிகின்றது. ஆயினும் சட்டவிரோதப் படகுப் பயணங்கள் மூலம் பிற நாடுகளுக்குச் செல்ல முடியாது என்றும், அது தற்கொலைக்குச் சமமான பயணம் என்றும் சர்வதேச நாடுகள் அறிவுறுத்தியுள்ளன. (அ-எ-இ)

### போதைப்...

ஹெரோய்ன் போதைப் பொருளும், 49 போதை மாத்திரைகளும் நேற்றுக் கைப்பற்றப்பட்டுள்ளன என்று கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.
இரகசியத் தகவலுக்கு அமைய இவை கைப்பற்றப்பட்டன என்றும், இந்தச் சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.
சந்தேகநபரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்த பொலிஸார், விசாரணைகளின் பின்னர் அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் தெரிவித்தனர். (அ-எ-113)

### அரசியல்...

தேசியக் கூட்டமைப்பையும் மீண்டும் ஏமாற்ற ரணில் - ராஜபக்ச அரசு முயற்சிக்கின்றது. ஆனால், அது சரி வராது.
இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.
'புதிய அரசமைப்பின் ஊடாக அரசியல் தீர்வே தமிழ் மக்களின் பிரதான எதிர்பார்ப்பு. அதை நாம் நிறைவேற்றியே தீருவோம்' என்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளமை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ரணில் - ராஜபக்ச நிலையான அரசு அல்ல. இது ஆட்டம் காணும் அரசு. இந்த அரசின் பொய்யான வாக்குறுதிகளை நம்ப சம்பந்தனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் முட்டாள்கள் அல்லர்.
அதேவேளை, ராஜபக்சக்களைக் காப்பாற்றிக்கொண்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நம்பத் தமிழ் மக்கள் தயாராகவில்லை.
மலரவுள்ள ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஆட்சியில் அரசியல் தீர்வு உள்ளிட்ட தமிழர்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் நாம் தீர்வுகளை வழங்கியே தீருவோம் - என்றார். (அ-எ-22)

### கூட்டமைப்புக்குள்...

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொதுவெளியில் முரண்பாடான கருத்துக்களை வெளியிடுவது தொடர்பில் வினவியபோதே சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனநாயகக் கட்சி. கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கருத்துக்களைச் சுதந்திரமாக வெளியிட முழு உரிமை உண்டு. சிலரின் கருத்துக்களை வைத்துக்கொண்டு கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கிடையில் முரண்பாடு, பிளவு என்று எடைபோடக் கூடாது. உண்மையில் கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கிடையில் எந்த முரண்பாடும் பிளவும் இல்லை. அவர்கள் ஓரணியாகச் செயற்படுகின்றார்கள்" - என்றார்.
உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் கருத்துத் தெரிவித்த இரா.சம்பந்தன், "உள்ளூராட்சி சபைத் தேர்தலை பிற்போடாது உரிய காலத்தில் அதை அரசு நடத்தவேண்டும். அதேவேளை, மாகாண சபைத் தேர்தலையும் அரசு விரைந்து நடத்தவேண்டும். எந்தத் தேர்தலையும் எதிர்கொள்ளத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராகவே உள்ளது" - என்றார். (அ-எ-22)

### இளவாலையில்...

படுகாயமடைந்தார். சிவானந்தன் ஜெயக்குமார் (வயது-42) என்ற நபரே காயமடைந்தவராவார்.
ஆலயமொன்றில் இடம்பெற்றுவரும் நிர்வாக மோசடிகள் தொடர்பில் அண்மையில் வடக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்து முறைப்பாடு வழங்கிய நபர் மீதே இந்த வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
தாக்குதலில் படுகாயமடைந்த நபர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-26-125)

### வடக்கே...

18ஆம் திகதி வடக்குக்கு வரும் ரணில் விக்கிரமசிங்க வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களுக்குச் செல்வார் என்று தெரிகின்றது.
அவர் அங்கு ஒருக்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பங்குகொள்வார் என்றும், நிலைமைகளை ஆராய்வார் என்றும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-எ-26)

### 3 குடும்பங்கள்...

குடும்பங்களைச் சேர்ந்த 9 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ். மாவட்ட இடர் முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் டி.என்.சூரியராஜா தெரிவித்தார்.
நேற்றுக் காலை முதல் யாழ்ப்பாண மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் மழை பெய்துவருகிறது. இதனால் மூன்று வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (அ-எ-26-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். - கொழும்பு பஸ்களில் நாளை முதல் பரிசோதனை

## வடமாகாண தனியார் போக்குவரத்து உரிமையாளர் சங்கத் தலைவர் அறிவிப்பு

**யாழ்ப்பாணம், நவ. 10**

**யாழ்.- கொழும்பு சேவையில் ஈடுபடும் அனைத்து தனியார் பேருந்துகளும் நாளை வெள்ளிக்கிழமை முதல் முகமாலைப் பகுதியில் பரிசோதனைக்குட்படுத்தப்படும் என வீதி பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் உறுப்பினரும் வடக்கு மாகாண தனியார் போக்குவரத்து உரிமையாளர் சங்கத்தின் தலைவருமான சி.சிவபரன் அறிவித்துள்ளார்.**

நேற்றுமுன்தினம் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்போதே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்; நாளை வெள்ளிக்கிழமை முதல் முகமாலையில் கொழும்பு- யாழ்ப்பாண இரவு சேவையில் ஈடுபடும் பேருந்துகள் அனைத்தினதும் வழித்தட அனுமதிப் பத்திரங்கள், சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவை பரிசோதிக்கப்படும்.

அதேபோல் புளியங்குளப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குச் செல்லும் அனைத்துப் பேருந்துகளும் 20 நிமிடங்கள் நிறுத்திவைக்கப்பட்டு மீண்டும் பயணிக்க அனுமதிக்கப்படுவது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ் - கொழும்பு சேவையில் ஈடுபடும் அனைத்து தனியார் பேருந்து சாரதிகளும் தங்களுடைய வழித்தட அனுமதிப்பத்திரம் மற்றும் விசேட சாரதி அனுமதிப்பத்திரம் என்பவற்றை தங்களது உடைமையில் வைத்திருப்பது அவசியம்.

அது தவறும் பட்சத்தில் பொலிஸார் மற்றும் வடக்கு மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் அதிகாரிகள் ஆகியோரால் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

இதேவேளை கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குப் பயணித்த பேருந்து வவுனியாவில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகி மூவர் உயிரிழந்த சம்பவம் உள்ளடங்கலாக வவுனியாவில் அன்றைய தினம் 3 சொகுசு பேருந்து விபத்துக்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)


## காணி விற்பனைக்கு

அல்லைப்பிட்டி பிரதேச செயலகத்திற்கு அருகாமையில் 147 பரப்பு தென்னங்காணி கடற்கரையை அண்டியவாறு மேல்மாடி கட்டடத்துடன் வருடம் முழுவதும் நல்லதண்ணீர் கிடைக்கக்கூடிய இரண்டு துறவும். கிணறும் உள்ளடங்கியவாறு நீர்ப்பாசன குழாய்கள் பொருத்தப்பட்டுள்ளன.

077 357 7783

(cs.41545) (2.6)

DHL துரித கடிதங்கள் பொதிகள் சேவை

▲சகல நாடுகளுக்குமான கடிதங்கள் 4 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
▲11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட சலுகைகள்
▲கனடா 11 Kg - 1200/=





திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. Road, Jaffna. 0777 554528

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு.**

- நல்ல தண்ணீரூற்றுச் சூழல்
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும்
- வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

**பார்வையிடும் நேரம்:-**

- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

தரகர் தேவையில்லை.

**தொடர்பு:- ஜெயம்**
**077 814 7389**
**077 986 5457**


### வயோதிபர்களின்...

வீடொன்றுக்குள் நுழைந்த இருவர் அங்கிருந்தவர்களை அச்சுறுத்தி சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. வீட்டில் வயோதிப் பெண் ஒருவர் தனித்திருந்த நிலையில், வீட்டுக்குள் நுழைந்த இருவர் அவரை அச்சுறுத்திக் கொள்ளையிட்டுள்ளனர். கொள்ளையிட்டவர்களை வீட்டில் இருந்த பெண் அடையாளம் காட்டியுள்ளார் என்றும், அந்த வீட்டில் வேலை செய்யும் பெண்ணின் உறவினரே கொள்ளையில் ஈடுபட்டவர் என்றும் கூறப்படுகின்றது.

இரு வாரங்களுக்கு முன்னரும் அந்தப் பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் நுழைந்தவர்கள் அங்கிருந்த வயோதிபப் பெண்ணை அச்சுறுத்தி சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வயோதிபர்கள் தனித்திருக்கும் வீடுகளுக்கு வேலைக்குச் செல்லும் பெண்கள், வீட்டுத் தகவல்களைத் தெரிவித்து, அவர்களின் உறவினர்கள் கொள்ளையிடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். (அ-எ-20)

### நினைவுகூர்வதற்கு...

பணித்தவர்களையும் நினைவுகூர்ந்து நினைவு தின நிகழ்வொன்று நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

செயற்பாட்டாளர்கள் சிலர் நேற்றுப் பிற்பகல் காலிமுகத்திடலில் ஒன்றுகூடிய போது, அங்கு வந்த பொலிஸார் ஒரு பகுதியில் மாத்திரம் நிகழ்வை மேற்கொள்ள முடியும் என்று அறிவுறுத்தினர். அதனால், அமைதியின்மை ஏற்பட்டது. பின்னர் தேரர்கள் உள்ளிட்ட தரப்பினர் காலிமுகத்திடலுக்கு முன்பாகவுள்ள ஒரு இடத்தில் நினைவுகூரல் நிகழ்வை முன்னெடுத்தனர். சமய வழிபாடுகளும் இதன்போது இடம்பெற்றன. பொலிஸார் மீண்டும் தலையிட்டு அவர்களை அங்கிருந்து வெளியேற்றினர்.

அதன்பின்னர் போராட்டச் செயற்பாட்டாளர்கள் காலி முகத்திடலில் ஒருபகுதிக்கு சென்று விளக்குகளை ஏற்றி போராட்டத்தில் தம்மை அர்ப்பணித்தோரை நினைவு கூர்ந்தனர். (அ-எ-இ)








## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 27 • 11 • 1949



மறைவு 10 • 10 • 2022

தையிட்டியை பிறப்பிடமாகவும், சித்தன்கேணி மற்றும் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட 10. 10. 2022 அன்று இறைவனடி சேர்ந்த

### அமரர் சின்னத்துரை கருணானந்தன்

**(ஓய்வு பெற்ற தபால் ஊழியர்)**

அவர்களின் மரணச்சடங்கில் கலந்துகொண்ட அனைவருக்கும், தோளோடுதோள் நின்று உதவியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தவர்களுக்கும், தொலைவில் இருந்து துயர்பகிர்ந்தவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இன்று (10.11.2022) வியாழக்கிழமை** முற்பகல் 11.00 மணியளவில் **நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில்** நிகழும் அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும், அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இல.61/1, பருத்தித்துறை வீதி,**
**ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

(CS/21765)1-6




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org